# சாதாரணக்கூட்டம்

**விளம்பி வருடம் ஆடி மாதம் 24ஆம் தேதி 2019ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 09ம் தேதி (09.08.2019) வெள்ளி கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அம்பாசமுத்திரம் நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.ஜெ.பிரேம்ஆனந்த்,B.Sc.,**
தனி அலுவலர்/ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி

**பொருள் எண்.1**

அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய, கீழ்கண்ட விபரப்படி உள்ள தார்சாலை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிகளை தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு நிதி (TURIP) 2019–20 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிதிபெறும் பொருட்டு விரிவான திட்ட மதிப்பீடு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களிடம் நிதி பெறும் பொருட்டு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 21வது வார்டு NGO காலனி, 1வது வார்டு கோவில்குளம் சாட்டுபத்து ரோடு தார்சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி மற்றும் 9வது வார்டு மேலப்பாளையம் மூலநாதசாமி கோவில் கீழ, மேல, வடக்கு மற்றும் தெற்கு ரத வீதி பேவர்பிளாக் சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி | 2.754 | 5.50, 4.00 & 7.00 | 200.00 |
| 2 | 14வது வார்டு பண்ணை சங்கரய்யர் நகர் மேற்கு பகுதி, 21வது வார்டு தீர்த்தபதி பள்ளி வடக்கு ரோடு, கால்வாய் ரோடு, முடப்பாலம் மேலத்தெரு , 5வது வார்டு காசிவிஸ்வநாத கோவில் தெரு, சோலைபுரம் தார்சாலை அமைத்து மேம்பாடு செய்யும்பணி மற்றும் 5வது வார்டு காசி விஸ்வநாதர் கோவில் கீழ, மேல, வடக்கு மற்றும் தெற்கு ரத வீதி பேவர்பிளாக் சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி | 2.381 | 4.00, 5.40, 5.00 & 7.00 | 200.00 |
| 3 | 11வது வார்டு சந்தமடம் நடுத்தெரு, சந்தமடம் வடக்கு தெரு, மணல்ஓடை தெரு, மணல்ஓடை தெரு மேற்கு முடுக்கு, 6வது வார்டு புதுகிராமம் சேனையர் மேற்கு தெரு, நடுத்தெரு, கீழத்தெரு, ஆண்டாள் ஸ்டோர் தெரு, 18வது வார்டு செங்குந்தர் கீழ தெரு, 15வது வார்டு இல்லத்தார் வடக்கு தெரு, 19வது வார்டு கம்மாளர் மேல, நடுத்தெரு, கீழத்தெரு மற்றும் மேற்கு முடுக்கு, 21 வது வார்டு முடப்பாலம் முடுக்கு மற்றும் 1வது வார்டு ஆசாரிமார் தெரு பேவர்பிளாக்சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி | 2.331 | 2.0, 2.6, 2.8, 3.0, 4.0 & 5.0 | 200.00 |
| | மொத்தம் | **7.466** | – | 600.00 |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 491 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய சந்தைக்கு வரும் வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் ரசீது புத்தகம் காலியாகி விட்டபடியால், 50 எண்ணம் ரசீது புத்தகங்கள் அவசர அவசியம் கருதி அம்பாசமுத்திரம் சத்தியஜோதி அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. அதற்கு கட்டணமாக மேற்படி அச்சகத்தின் பில் எண்.489/26.08.2019ன்படி, பில் தொகை ரூ.3000/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

செலவுத் தொகையை வருவாய் நிதியில் வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 492 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

அம்பாசமுத்திரம் நகராட்சி அலுவலகத்தில் கணினி அறை மற்றும் அனைத்து பிரிவுகளிலும் இயங்கி வரும் கணினி மற்றும் பிரிண்டர்களுக்கான வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) 31.07.2019 அன்றுடன் முடிவடைவதால், 01.08.2019 முதல் 31.07.2020 வரை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 29.07.2019 அன்று வரப்பெற்ற கீழ்க்காணும் விபரப்படியான விலைப்புள்ளிகள் அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Description | QTY | Pegasus Sales & Services | LIVE Infotech | Premier Systems |
|---|---|---|---|---|---|
| 1 | HCL Desktops | 12 Nos. | 54000 | 61200 | 60000 |
| 2 | EPSON DMP Printers | 2 Nos. | 5000 | 5600 | 5000 |
| | | **Total** | **59000** | **66800** | **65000** |

**அலுவலக குறிப்பு:**

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Pegasus Sales & Services, Cheranmahadevi நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண். 493 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:4**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் அனைத்து பிரிவுகள் மற்றும் அலுவலகத்திற்கு தேவையான அனைத்து வகையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் (All Stationery Items) வாங்கவும் அதற்கான பட்டியல் தொகை வழங்கப்படுவதற்கும் 2019–2020ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மன்றத்தின் ஒட்டு மொத்த அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

செலவுத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 494 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:5**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 17349/2019/இ3 நாள் 03.09.2019 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20ன்கீழ் அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு ரூ6.00கோடி மதிப்பீட்டில் சாலைபணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி ரூ2.00 கோடி, நகராட்சிக்கான மாநில நிதிக்குழு/ மத்திய நிதிக்குழு மானியநிதி/ நில அபிவிருத்திக்கட்டணம் ஆகியவற்றிலிருந்து ரூ3.00 கோடி மற்றும் நகராட்சி பங்களிப்பு ரூ1.00 கோடி ஒதுக்கீடு செய்யபடுவதாகவும், மேற்படி நிதி ஒதுக்கீடு ஏற்புடையதாயின் அதற்கான நகர்மன்ற ஒப்புதல் பெற்று அனுப்பிவைக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20ன்கீழ் இந்நகராட்சிக்கு கீழ்காணும் விபரப்படி நிதிஒதுக்கீடு பெறுவதற்கும் மேலும் கீழ்காணும் சாலை பணிகளை தேர்வு செய்வதற்க்கும் நகராட்சியின் நிதிநிலையை கருத்தில்கொண்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| அம்பாசமுத்திரம் | 4.00 | 2.00 | 1.50 | 0.50 |

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை (ரூஇலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 21வது வார்டு NGO காலனி, 1வது வார்டு கோவில்குளம் சாட்டுபத்து ரோடு தார்சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி மற்றும் 9வது வார்டு மேலப்பாளையம் மூலநாதசாமி கோவில் கீழ, மேல, வடக்கு மற்றும் தெற்கு ரத வீதி பேவர்பிளாக் சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி | 2.754 | 5.50, 4.00 & 7.00 | 200.00 |
| 2 | 14வது வார்டு பண்ணை சங்கரய்யர் நகர் மேற்கு பகுதி, 21வது வார்டு தீர்த்தபதி பள்ளி வடக்கு ரோடு, கால்வாய் ரோடு, முடப்பாலம் மேலத்தெரு , 5வது வார்டு காசிவிஸ்வநாத கோவில் தெரு, சோலைபுரம் தார்சாலை அமைத்து மேம்பாடு செய்யும்பணி மற்றும் 5வது வார்டு காசி விஸ்வநாதர் கோவில் கீழ, மேல, வடக்கு மற்றும் தெற்கு ரத வீதி பேவர்பிளாக் சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி | 2.381 | 4.00, 5.40, 5.00 & 7.00 | 200.00 |
| | மொத்தம் | **5.135** | – | 400.00 |

மேற்காண் நிதி ஒதுக்கீட்டின்படி மொத்த மதிப்பீடு தொகை ரூ4.00 கோடியில் சாலைபணிகள் மேற்கொள்ளவும் மேற்கண்ட சாலைகளை தேர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்2148/2017/இ1)

**தீர்மான எண். 495 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:6**

அம்பாசமுத்திரம் வட்டம் மற்றும் அம்பாசமுத்திரம் குறுவட்டம் ஊர்க்காடு கிராமம் நத்தம் புல எண்.102/2ல் உட்பிரிவு எண்.37Bல் 0.03.51 ஹெக்டேர் நிலத்தினை அம்பாசமுத்திரம் சார்பு நீதிபதி மற்றும் உரிமையியல் நீதிபதி குடியிருப்பு வளாகம் கட்டும் வகைக்கு நிலமாற்றம் செய்ய ஆட்சேபணை இல்லை என நகராட்சி தீர்மானம் வழங்க கோரி வரப்பெற்ற அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் கடிதம் ந.க.எண்.ஆ1/3324/18, நாள்.20.07.2019 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

ஊர்க்காடு கிராமம் நத்தம் புல எண்.102/2ல் 0.03.51ஹெக்டேர் பரப்பளவில் நீதிபதிகள் குடியிருப்பு இடத்தினை அம்பாசமுத்திரம் சார்பு நீதிபதி மற்றும் உரிமையியல் நீதிபதி குடியிருப்பு வளாகம் கட்டிடம் வகைக்கு நிலமாற்றம் செய்ய ஆட்சேபணை இல்லை என மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண். 496 / தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்:7**

அம்பாசமுத்திரம் வட்ட மேல அம்பாசமுத்திரம் கிராமம் சர்வே எண்.191/3, பெரிய குளம் புறம்போக்கு என தாக்காவாகியிருந்து வரும் நிலத்தில் புறவழிச்சாலை அமைப்பதற்கு நிலமாற்றம் செய்ய ஆட்சேபணை இல்லை என நகராட்சி தீர்மானம் வழங்ககோரி வரப்பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.ஜி4/45540/2012, நாள்.10.07.2019 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அம்பாசமுத்திரம் வட்டம் மேலம்பாசமுத்திரம் கிராமம் சர்வே எண்.191/3, பெரியகுளம் புறம்போக்கு. எனவே, மேற்படி இடத்தில் புறவழிச்சாலை அமைப்பதற்கு நிலமாற்றம் செய்ய ஆட்சேபணை இல்லை என மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண். 497 / தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்:8**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரியும் 1) திரு.சு.குமார் மற்றும் 2) திரு.மு.கணேசன், த/பெ.முத்தையா ஆகியோர் தங்களுக்கு வாகன முன்பணம் வழங்க வேண்டி விண்ணப்பித்துள்ளனர். அன்னாரின் விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு:**

மேற்காணும் துப்புரவு பணியாளர்களுக்கு வாகன முன்பணம் தலா ரூ.50,000/– வீதம் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 498 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:9**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய நீரேற்று நிலையங்களில் கீழ்க்காணும் பராமரிப்பு பணிகளுக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப் புள்ளி பெறப்பட்ட நாள் | விலைப் புள்ளிதாரர் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | R.செல்வின் துரை, கருவந்தா | D.மத்தியாஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கருவந்தா | மகபூப் பாஷா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், விக்கிரமசிங்க புரம் |
| 1 | கோடாரங்குளம் இயல்பு நீரேற்று நிலையத்தில் 15HP நீர் மூழ்கி மோட்டார் எண்.1 காயில் சுற்றி பழுது நீக்கம் செய்தல். | 10.06.2019 | 28100 | 29100 | 28600 |
| 2 | கோடாரங்குளம் இயல்பு நீரேற்று நிலையத்தில் 15HP நீர் மூழ்கி மோட்டார் எண்.2 பம்பு மற்றும் புட்வால்வு பழுது நீக்கம் செய்தல். | 10.07.2019 | 23500 | 23800 | 25100 |
| 3 | சுப்பிரமணியபுரம் 9.0LL/ GLR வளாகம் – ஆர்.எஸ். காலனி OHT க்கு நீரேற்றம் 7.5 HP நீர்மூழ்கி மோட்டாருக்கு புதிதாக காயில் சுற்றி பழுது நீக்கம் செய்தல் | 10.07.2019 | 18200 | 19900 | 20700 |

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மேற்காணும் பணிகளுக்கு பட்டியல் படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள R.செல்வின் துரை, கருவந்தா என்பவரது விலைப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம். செலனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 499 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:10**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டபணிகளின் சாதனைகளை கீழ்க்காணும் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு செலவினத் தொகை ரூ.19,888/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | விளம்பரம் விபரம் | நாளிதழின் பெயர் | விளம்பரம் செய்த நாள் | தொகை வழங்கவேண்டிய விபரம் | பில் தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | திட்டபணிகள் | தினமணி | 04.03.2019 | Express Publication (Madurai Pvt ltd.,) | 19,888 |

**அலுவலக குறிப்பு**

செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 500 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:11**

அம்பாசமுத்திரம் நகராட்சி பிரதான சாலையில் அமைந்துள்ள சந்தைக்கு உரிமை கொண்டாடி நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள உயர் நீதிமன்ற வழக்குகளில் எதிர்வாதுரை தயார் செய்து நகராட்சி சார்பாக ஆஜராகும் பொருட்டு திரு.ஆதிமூலபாண்டியன், அரசு வழக்கறிஞர், உயர் நீதி மன்ற மதுரை கிளை அவர்களை Standing Council Lawyer ஆக நியமனம் செய்யவும், அரசு விதிகளின்படி அன்னாருக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 501 / அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) <u>J,பிரேம்ஆனந்த்,</u>**
**தனிஅலுவலர்/ஆணையாளர்**
அம்பாசமுத்திரம் நகராட்சி

//உண்மை நகல்//

**ஆணையாளர்(பொ)**
அம்பாசமுத்திரம் நகராட்சி